" மதுரை மாவட்டத்தில் தயாரான ரூ. 1 கோடி மதிப்புள்ள கைத்தறி வேட்டிகளும், கைத்தறி சேலைகளும் ஏற்றுமதியாகாமல் தேங்கி சுமார் 10 ஆயிரம் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலை. "

அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்ட இந்தி மொழிக் கிளர்ச்சியின் காரணமாக தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறி வேஷ்டிகளையும் கைத்தறி சேலைகளையும் வட பகுதி மாநிலங்களிலுள்ளவர்கள் வாங்குவதற்கு மறுக்கிறார்கள். அதனால் அவைகள் தேங்கி, நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் உதவித் தொகையை வட நாட்டினர்கள் கொடுக்கவும் மறுக்கிறார்கள். இதன் காரணமாக, தமிழகம் பூராவிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மிகவும் சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகம் பூராவிலுமுள்ள நெசவாளர்கள் பற்றிய பிரச்னை இது. இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்குட்பட்ட பிரச்னை என்று சொல்வதற்கில்லை. ஆகவே, இந்த அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைப்பற்றி விவாதிக்க, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி துணிகளைப் பொறுத்தவரையில், தேக்கம் ஏற்பட்டது திடீரென்று புதியதாக இப்பொழுது மட்டும் ஏற்பட்டிருக்கிற ஒன்று அல்ல, ஆண்டுதோறும் ஏற்பட்டு வருகிற ஒன்றுதான். அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமோ அவைகளை முறைப்படி இந்த ஆண்டும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு கிட்டத்தட்ட 2½ அல்லது 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன. அதற்காகத்தான் சமீபத்தில்கூட கைத்தறிக் கண்காட்சி, கைத்தறி வார விழாக்களெல்லாம் கொண்டாடப்பட்டன. மேலும், இவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது, அல்லது வேறு வகையிலே எப்படிச் செலவழிப்பது என்பது பற்றியெல்லாம் கைத்தறி இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்கள். இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட அன்றாட நடவடிக்கையாக இருப்பதினாலும், இந்தச் சபையை ஒத்தி வைத்து விவாதிப்பதின் மூலம் ஒரு முடிவு காண்கிற நிலை ஏற்படாது என்பதாலும், தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாலும், இதைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. என். எஸ். வி. சித்தன் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 41-ன் கீழ் அறிவிக்கை கொடுத்திருந்தால், ஒரு வினா கேட்கலாம். இத்தீர்மானத்தை விதி 42-ன் கீழே கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் வினா கேட்கவில்லை. நான் முன்னால் கூறியதுபோல, பல ஆயிரக்கணக்கான நெசவாளர்களுடைய பிரச்னை இதில் அடங்கியிருப்பதால், அரசு ஒரு தனி அதிகாரியையோ அல்லது தூதுக் குழுவையோ பிற மாநிலங்களுக்கு அனுப்பி உடனே ஏற்றுமதி செய்வதற்கு வழிவகைகள் காண வேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய ஒத்திவைப்புப் பிரேரணையை நான் வற்புறுத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**(ii) மதுரையிலிருந்து சென்னைக்கு விமான மூலம் மல்லிகைப்பூ அனுப்ப இயலாமை.**

**திரு. கரு. சீமைச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ், இன்றைய அலுவலை ஒத்தி வைத்து, கீழ்க்கண்ட உடனடி முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக அறிவிக்கை கொடுத்துள்ளேன்:—

முப. 10-30 " மதுரையிலிருந்து சென்னைக்கு தினந்தோறும் 1,000 கிலோ வரை ம கைப்பூ விமானம் மூலம் அனுப்பப்படுகிறது. அடுத்த மாதம் 15-ம் தே லிருந்து இந்த விமான சர்வீஸ் இரவு நேரத்தில் மட்டும் செயல்பட இருப்பதால், மல்லிகைப்பூ அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டு மதுரை வட்டாரத்தில் மல்லிகைப்பூ தோட்டங்களை நடத்தி வருகிற நூற்றுக் கணக்கான குடும்பங்களின் பிழைப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது."

தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து ஒவ்வொரு நாளும், காலையிலே, 11-40 -க்கு புறப்பட்டு, சென்னைக்கு 1-40-க்கு வருகிறது விமானம்; அதில் மல்லிகைப்பூ அனுப்பப்படுகிறது. அதன் பிறகு அது பம்பாய்க்கும் கல்கத்தாவிற்கும் அனுப்பப்படுகிறது. இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பொரேஷன் எப்ரல் 15-ம் தேதி முதல் இரவு $8\frac{1}{4}$ மணிக்குத்தான் வரும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மல்லிகைப்பூ உற்பத்தி செய்யும் விவசாயக் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை வரை 25 மைல் தூரத்திற்கு மல்லிகைப்பூ விவசாயம் நடைபெறுகிறது. இதிலே விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் நஷ்டம் ஏற்படும் நிலைமைகள் இருப்பதால், நம்முடைய அரசு ஏர் லைன்ஸ் நிறுவனத்தாரைக் கண்டு பேசி, இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்றும், அது பற்றி விவாதிக்க அவையை ஒற்றிவைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்து நம் அரசின் கீழ் இருக்கும் அலுவல் அல்ல. இதுபற்றி, அவர்களுக்கு முறைப்படி தெரிவித்து, கஷ்டங்கள் ஏற்படாமல் மாற்றம் செய்யலாமா என்று பார்க்க வேண்டியது அரசின் அன்றாட அலுவல்களில் ஒன்றாகும் என்பதால், அது ஒற்றிவைப்புத் தீர்மானமாக வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

### 3. கவன ஈர்ப்பு.

### (i) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழையின்மையும் விளைச்சலின்மையும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

" திருநெல்வேலி மாவட்டம் நான்குனேரி வட்டம் இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழை தவறியதன் காரணமாக நஞ்சை, புஞ்சை பயிர்கள் விளைச்சலின்றி கரிவு ஏற்பட்டிருப்பதால், அப்பகுதி மக்கள் வேலை வாய்ப்பு இன்றியும், உண்ண உணவுப் பொருள்கள் கிடைக்காமலும் அவதிப்படுகிறார்கள்."

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை பொய்த்ததால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம் துணைவட்டத்தில் உள்ள பயிர்கள் கருகிப்போக அதன் விளைவாக அப்பகுதி மக்கள் வேலையின்றி, உணவின்றி அல்லல் படுகின்றனரென நாட்ட ஈர்ப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம் துணைவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை முழுதும் பொய்த்துவிட்டது. எனவே, இப்பகுதியிலுள்ள குடியானவர்கள் சீர்கேடான பருவ நிலைகளின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். புன்செய்ப் பயிர்கள் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தாலும் நன்செய்ப் பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டிருப்பதாலும், இப்பகுதிவாழ் மக்களின் பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடுற்றுள்ளது. அங்குள்ள உழவர்கள் தாங்கள் பயிரிட்ட சிறுதானியங்களையும் பயிர் வகைகளையும் தங்கள் சொந்த உபயோகத்திற்கே பெரிதும் பயன்படுத்திக் கொள்வர். எனவே